THE WORLD NEEDS THE WORD
IBT

ஜூலை 2026
மலர் 24, இதழ் 10

# சத்திய வார்த்தை

IBT நிறுவனர் (Late) Rev. Prof. S. பன்னீர் செல்வம்

SATHTHIYA VAARTHAI - TAMIL
இந்திய வேதாகம மொழிபெயர்ப்பாளர்களின் செய்தி மலர்

ஆண்டு சந்தா
ரூ. 100/-

# விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை



# விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை

*Pride goeth before destruction, and an haughty spirit before a fall (Prov. 16 : 18).*

அகந்தையும், மனமேட்டிமையும் நமக்கு ஆகாது. எல்லாச் சூழ்நிலைகளிலும் தாழ்மையோடு இருப்பதற்குக் கவனமாய் இருப்போமாக. அதற்குக் காரணம், மேன்மைக்கு முன்னானது தாழ்மை. மனமேட்டிமைக்கு எத்தனையோ காரணங்கள் உள்ளன. பணத்தினால் வரும் மனமேட்டிமை, வசதியினால் வருவது, எவரையும் மதிக்காமல் வாழ்வது, தான் என்ற எண்ணம், தாழ்ந்து போகாமல் இருப்பது, வறுமையில் இருப்பவர்களுக்கு உதவிக் கரம் நீட்டாதிருத்தல் இவைகள் எல்லாமே மனமேட்டிமையாகும். மனமேட்டிமை ஒரு மனிதனிடமோ/மனுஷியிடமோ குடியிருந்தால் அவர்கள் உள்ளத்தில் தோன்றும் முதல் காரியம், தாங்கள் செய்வது எல்லாமே சரியாக உள்ளது என்று நினைப்பதுதான். அடுத்தபடியாக தன்னைவிட யாரும் உயர்ந்துவிடக் கூடாது என்று எண்ணுவது. சிறிது நேரம் ஆற அமர்ந்து உட்கார்ந்து, தான் செய்வது சரியா/தவறா என்று யோசிப்பது கிடையாது. ஆகவே நமது உள்ளம், ஆத்துமா, ஜீவன் கீழே விழுவதற்கு / அழிவதற்கு முன்னாக நாம் சரியான பாதையில் காலடி வைப்போமானால் எந்த ஒரு தீங்கும் நம்மை அணுகாது.

__சவுல் ராஜா :__

இஸ்ரவேலின் முதல் ராஜாவாக தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர். ஆனால் ராஜா, மகிமை என்றால் என்ன, ராஜாவின் கடமை என்னவென்று அறியாமல் இருந்தபடியால், அவர் உள்ளத்தில் இருந்த ஒரே காரியம் தாவீது ராஜாவை முடித்துக்கட்ட வேண்டும் என்பதே. தேவ பயம் சிறிதும் இல்லை. கர்த்தர் அருவருக்கும் சூனியக் காரியிடம் / அஞ்சனம் பார்க்கிற ஒரு ஸ்திரீயைக் கண்டு குறி பார்க்கிறான். சவுல் அந்த ஸ்திரீயை நோக்கி, உன்மேல் எந்த பொல்லாப்பும் வராது என்று கர்த்தர் மேல் ஆணையிட்டுச் சொல்லுகிறேன் என்று கர்த்தர் மேல் ஆணையிட்டான். தான் ஒரு ராஜா, தன்னை மிஞ்சினவர்கள் இஸ்ரவேல் தேசத்தில் யாரும் இல்லையென்று மேட்டிமை கொண்டான். தேவன் அவனை அவன் ஸ்தானத்திலிருந்து எடுத்துப்போட்டு, தாவீதை அந்த சிங்காசனத்திலே அமர்த்தினார். சவுலே – அரசப் பதவியிலிருந்து விழப்போகிறீர் என்று சாமுவேல் தீர்க்கன் வந்து கூறுகிறான்.

**"...நீர் இஸ்ரவேலின் மேல் ராஜாவாயிராதபடிக்கு, கர்த்தர் உம்மையும் புறக்கணித்துத் தள்ளினார்" என்றான் (I சாமு. 15 : 26).**

__சவுல் எப்படி விழுந்தான்__

பெலிஸ்தியருக்கும், இஸ்ரவேலருக்கும் யுத்தம் பலத்தது. கில்போவா மலையிலே இஸ்ரவேலர் வெட்டுண்டு விழுந்தார்கள். சவுலின் குமாரர்களான யோனத்தான், அபினதாப், மல்கிசூவா மூன்று பேரும் பெலிஸ்தியர்களால் வெட்டிப் போடப்பட்டார்கள். சவுல் வில்வீரர்களால் பலத்தக் காயம்பட்டு சவுல் தனக்குத்தானே ஒரு பட்டயத்தை நட்டு அதின்மேல் விழுந்து செத்துப் போனான். இத்தனை விழுதலுக்கும் காரணம், சவுலின் மனமேட்டிமை. விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை என்று ஞானி கூறியது மெய்யாயிற்று. கவனமாயிருப்போமாக!

அடுத்து, இஸ்ரவேலிலே இரண்டாவதாக அரியணை ஏறியவர் தாவீது ராஜா. தாவீது, தான் ராஜாவாக வருவதற்கு முன், வாலிப வயதில், தேவனுக்கும் பிடிக்காத, இஸ்ரவேலருக்கும் எதிரியாக இருந்த பெலிஸ்தியரோடு ஏலா பள்ளத்தாக்கிலே யுத்தம் நடந்துவந்தது. தாவீதின் தகப்பனான ஈசாய்க்கு எட்டு மகன்கள். அதில் எட்டாவது மகன்தான் தாவீது. ஆடுகளை வனாந்தரத்திலே மேய்த்த போது கரடி, சிங்கம் போன்ற கொடிய மிருகங்களிடமிருந்து ஆடுகளைக் காப்பாற்றிய அனுபவம் தாவீதுக்கு இருந்தது. ஆகவே பெலிஸ்தியருக்கும், இஸ்ரவேலருக்கும் நடக்கும் போரில் தானும் கலந்து கொள்ள வேண்டும் என்று நினைத்திருக்கலாம். காரணம், தன்னுடைய முதல் மூன்று சகோதரர்களாகிய

எலியாப், அபினதாப், சம்மா (1 சாமு 17 : 13) ஆகியோர் சவுல் ராஜாவோடு கூட யுத்தத்திற்கு சென்றிருந்தார்கள். யுத்த களத்திற்கு தன் சகோதரர்களைக் காணச் சென்ற தாவீது, அங்கு எல்லோரும் கூடி பேசும் வார்த்தைகளைக் கேட்டவுடன், அந்த பெலிஸ்தனைக் காண வேண்டுமென்று நினைத்தான்.

ஒரு வழியாக ஏலா பள்ளத்தில் தாவீது வந்து நின்றான். கோலியாத்தின் (பெலிஸ்திய வீரன்) இராணுவ தோற்றத்தைப் பார்த்தான். கோலியாத் உலகப் பிரகாரமான காரியத்தைக் குறித்து மேட்டிமையாகப் பேசினான். ஆனால், தாவீதோ தன் வாழ்க்கையில் தேவன் எப்படியெல்லாம் நடத்தினார், நடத்துவார் என்று தன்னைத் தாழ்த்திப் பேசினான்.

இஸ்ரவேலில் தேவன் ஒருவர் உண்டு என்று பூலோகத்தார் எல்லோரும் அறிந்து கொள்ளுவார்கள். யுத்தம் கர்த்தருடையது என்றான் தாவீது.

பெலிஸ்தனுக்கு தன்னுடைய மரணம் எப்படியிருக்கும், தனக்கும் தாவீதுக்கும் எத்தனை நாள் யுத்தம் நடக்கும்; இஸ்ரவேல் மக்கள் பெலிஸ்தருக்கு முன்பாக எப்படி முறிந்தோடிப் போவார்கள் என்றெல்லாம் கற்பனை செய்திருப்பான். கீழே தலைகுப்புற விழுதலுக்கு முன்பாக அவன் மனமேட்டிமையாகி, தாவீதை துச்சமாக நினைத்தான். அவனுடைய கரத்தினால் தான் தன்னுடைய ஜீவன் முடியப்போகிறது என்று கடுகு அளவு கூட நினைத்திருக்க மாட்டான். போர் உக்கிரமான நிலைக்கு வந்தபோது, கோலியாத் எழும்பி தாவீதுக்கு நேராக வந்தான். உடனே தாவீது ஒரு கூழாங்கல்லை எடுத்து கவணிலே வைத்து சுழற்றி பெலிஸ்தியன் நெற்றியில் படும்படியாக எறிந்தான்.

பெலிஸ்திய மாவீரன் நெற்றியில் தாவீதின் கல் புதைந்து போனது. தலை குப்புற போர்களத்தில் விழுந்து ஜீவனை விட்டான். மேட்டிமை எப்போதும் வீழ்ச்சியடையும். ஒரு சில நிமிடங்களில் போரானது முற்றுப்பெற்றது. இஸ்ரவேலர் வெற்றி பெற்றனர். தாவீதை மறைத்து கர்த்தர் முன்னின்று யுத்தத்தை நடத்தி வெற்றி சிறந்தார். நம்மிடம் மேட்டிமை இருக்குமானால் என்ன செய்தாலும் அது சரியாகத்தான் இருக்கும் என்று நமக்கு நாமே தீர்ப்புக் கூறிக் கொள்கிறோம். அப்படி நினைத்தால் நாம் விழுந்து விடுவோம்.

கலாத்தியர் 5 : 19, 20-இல் தேவனுக்குப் பிரியமில்லாத பதினேழு வகையான தீய காரியங்களைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார். நாம் விழுந்து விடாமல் இருக்க வேண்டுமானால், அந்தக் காரியங்களை நம் வாழ்க்கையினின்றும் நாம் தள்ளி வைப்போமாக. அதே சமயம் கலாத். 5 : 22, 23-இல் பார்க்கிற நற்குணங்களைப் பின்பற்றி, நற்குணசாலிகளாக காணப்படுவோமாக.

விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை என்ற நீதிமொழியானது வேதாகமத்தில் எத்தனையோ பேர்களின் வாழ்க்கையில் நடந்திருக்கிறது. அதிலே மூன்று பேர் வாழ்க்கையில் நடந்த உண்மை நிகழ்வுகளைக் குறித்து தெரிந்து கொள்ளலாம்.

1. **ஜெபத்திலே வந்த மனமேட்டிமை**
2. **தூபம் காட்டுவதிலே வந்த மனமேட்டிமை**
3. **பண ஆசையிலே வந்த மனமேட்டிமை**

மேலே உள்ள மூன்று தலைப்புகளில் முதல் மற்றும் மூன்றாம் தலைப்புகள் புதிய ஏற்பாட்டிலிருந்து எடுக்கப்பட்டவை. இரண்டாவது தலைப்பு மட்டும் பழைய ஏற்பாட்டிலிருந்து எடுக்கப்பட்டது.

### 1. ஜெபத்திலே வந்த மனமேட்டிமை

**''தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" (லூக்.18 :14).**

மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் ஏதாவதொன்றில் மேட்டிமை என்ற குணம் இருக்கும். ஆனால், எல்லா மேட்டிமை குணத்துக்கும் தலைமையிடம் மனமேட்டிமை. நமது உள்ளம், மனம், இருதயம், ஆத்துமா ஆகியவற்றில் மேட்டிமை குடிகொள்ளுமேயானால் நம் நிலை எப்படியிருக்குமென்றால், தடம் புரண்ட

ரயில் போலவும், அச்சாணி கழன்ற மாட்டு வண்டி போலவும் தலைகுப்புற விழுதலுக்கு அடிப்படைக் காரணமாகிவிடும்.

அன்னாள் தன் குடும்பத்திலே வந்த சிக்கலுக்கு எப்படி / எங்கு / யாரிடம் சென்று தீர்வு காணலாம் என்று நினைத்த போது, கர்த்தரை முன்னாக வைத்தாள். ஆலயத்திற்குச் சென்று தன் பொருத்தனையை கர்த்தரிடம் வைத்தாள். பெனின்னாளைப் பற்றி ஒரு வார்த்தைகூட குறைபாடாக பேசவில்லை. அன்னாள் தன் கால் வழுவாதபடி தாழ்மையினால் கர்த்தருக்கு முன்பாக தன்னைக் காத்துக் கொண்டாள்.

லூக்கா 18-ஆம் அதிகாரத்தில் ஜெபம் செய்ய தேவனுடைய ஆலயத்தை நோக்கி இரண்டு ஆண்கள் போனார்கள்.ஒருவன் பரிசேயன், மற்றொருவன் ஆயக்காரன். ஜெபம் செய்ய ஆலயத்திற்கு போவது நல்லது தான். ஆண்டவரோடு நாம் பேசுவதற்கு உரிய ஒரே நிரந்தரமானது, ஜெ...ப...ம்... (Prayer) அப்பா, பிள்ளைகள் என்ற உறவை ஏற்படுத்தித் தருவது ஜெபம் மட்டுமே. காரணம், நம் தகப்பனிடம் எதை வேண்டுமானாலும் கேட்பதற்கு நமக்கு உரிமை உண்டு. ஆனால், அந்த விருப்பத்தை / காரியத்தை சரியான முறையில் விண்ணப்பித்தால் கர்த்தர் அதை நிறைவேற்றித் தருவார்.

## பரிசேயனின் ஜெபம்

ஆலயத்திற்கு ஒழுங்காகச் செல்வது, ஜெபிப்பது, நன்றி செலுத்துவது, வாரத்தில் இரண்டு தடவை உபவாசித்தல், அநியாயக்காரனாக, விபச்சாரக்காரனாக இல்லாமை, வருமானத்தில் தசமபாகம் செலுத்துதல் ஆகிய நற்பண்புகள் அந்தப் பரிசேயனிடம் இருந்தன. இந்தப் பண்புகள் நல்லதுதான். இதினால் ஒரு மனிதன் நீதிமானாக்கப்படுவதில்லை. நான் இப்படியெல்லாம் இருக்கிறேன் என்று கூறுவது சுயநீதியாகும். பரிசேயன் ஜெபம் செய்வதில் ஒரு பெரிய மேட்டிமை உள்ளது. ஜெபத்தில் நாம் யாரையும் ஒப்புமைப்படுத்திப் (Comparison) பார்க்கக் கூடாது.

## ஆயக்காரனின் ஜெபம்

தேவனே! பாவியாகிய என் மேல் கிருபையாயிரும். ஆயக்காரனின் ஜெபத்திலே தாழ்மையைத் தவிர வேறொன்றையும் காணமுடியாது. கர்த்தர் இரண்டு பேருடைய விண்ணப்பத்தையும் பார்க்கிறார்.

## ஆயக்காரன் ஜெபம் ஏன் கேட்கப்பட்டது?

ஆயக்காரன் தான் ஒரு பாவி என்று ஒப்புக் கொண்டதோடு தாழ்மையுடன் கிருபைக்காகக் கெஞ்சியதால் நீதிமானாக்கப்பட்டது போல நாமும் நமது பாவங்களை கர்த்தரிடம் கூறி, நம்மை மன்னிக்குமாறு அறிக்கையிடும் போது, நம்மீது கிருபையாக இரங்குவார்.

ரோமர் 3 : 24-இல் வேதம் என்ன சொல்லுகிறது?

**இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்;**

எவ்வளவு தான் படிப்பு, பதவி, அந்தஸ்து இருந்தாலும் கர்த்தரின் கிருபை நம் மீது இல்லாவிட்டால் நாம் ஒன்றுமில்லையென்று அறிந்து கொள்ள வேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுலுக்கு ஒரு முள் கொடுக்கப்பட்டிருந்தது. அது என்னை விட்டு நீங்கும்படிக்கு நான் மூன்று தரம் கர்த்தரிடத்தில் வேண்டிக் கொண்டேன். அதற்கு அவர், **என் கிருபை உனக்குப் போதும்** (2 கொரி 12 : 9) என்றார். கர்த்தருடைய கிருபையால்தான் ஒவ்வொரு நிமிஷத்தையும் கடந்து வர முடியும். பரிசேயனின் ஜெபம் விழுந்ததற்குக் காரணம் தன்னைக் குறித்த மேன்மை. மேட்டிமையானவனையோ தேவன் தூரத்திலிருந்தே அறிகிறார். செப்பத்தா பள்ளத்தாக்கில் ஆசா ராஜாவின் ஜெபம் கர்த்தரால் கேட்கப்பட்டதற்குக் காரணம், தாழ்மையோடு ஜெபித்து கர்த்தரின் கிருபைக்காகக் காத்திருந்தார். நாமும் நம்முடைய ஜெபத்திலே மேட்டிமையை விட்டு, யாரையும் ஒப்புமைப்படுத்தி

விண்ணப்பத்தை ஏறெடுக்காமல், தாழ்ந்து, பணிந்து கர்த்தரின் கிருபைக்காக மன்றாடி ஜெபிப்போமாக!

## 2. தூபம் காட்டுவதிலே மனமேட்டிமை

**...உசியா தூபகலசத்தைத் தன் கையிலே பிடித்து, ஆசாரியரோடே கோபமாய்ப் பேசினான் (2 நாளா 26 : 19).**

அமத்சியாவின் மகனுக்கு அசரியா, உசியா என்று இரண்டு பெயர்கள் உண்டு. அமத்சியா மரணமடைந்த போது உசியாவுக்கு நான்கு வயது. உசியாவுக்கு பதினாறு வயதானபோது பொறுப்பேற்றார். அதுவரை அரசுப்பொறுப்பை அசரியாவின் சார்பில் பொறுப்பில் இருந்தவர்கள் கவனித்துக் கொண்டனர். உசியா கர்த்தரைத் தேடிய நாட்களில் தேவன் அவன் காரியங்களை வாய்க்கச் செய்தார்.

உசியா ராஜாவின் வாழ்க்கை நமக்கு என்ன எடுத்துரைக்கிறது என்றால், கர்த்தருக்குள் இருப்பவர்களோடு நல்ல உறவு கொண்டிருக்க வேண்டும். அவர்கள் ஆலோசனையைக் கேட்டு நடப்பதற்கும், நாம் தாழ்ந்து போவதற்கும் பழகிக் கொள்ள வேண்டும். ஒரு ராஜாவின் கடமை என்னவோ அதில் மட்டுமே கருத்தாய், செவ்வையாய் செய்தால் போதும். அதை விடுத்து தனக்கு அளிக்கப்படாத, சம்பந்தமில்லாத வேலையில் தலையிடக் கூடாது.

சிறந்த அரசராகப் புகழ் பெற்றதினால் மேட்டிமை மனதிற்குள் புகுந்து பெருமையாய் செயல்பட்டார். அதன் விளைவு, தனக்குத் தேவையில்லாத வேலைக்குள் தன்னை ஈடுபடுத்த முயன்றார்.

### உசியா செய்த தவறு என்ன?

**உசியா பலப்பட்ட போது தனக்கு, கேடுண்டாகும் மட்டும் அவனுடைய மனம் மேட்டிமையாகி, தன் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக மீறுதல் செய்து, தூபபீடத்தின் மேல் தூபங்காட்ட கர்த்தருடைய ஆலயத்திற்குள் பிரவேசித்தான் (2 நாளா 26 : 16).**

உசியா ஆலயத்தின் உள்ளே வந்ததும் ராஜாவுக்கு பின்னால் தேவனுடைய ஆசாரியனான அசரியாவும், மற்றும் பராக்கிரமசாலிகளான எண்பது ஆசாரியர்களும் உட்பிரவேசித்தினர்.

### ஆலயத்தினுள் நடந்த காரியம் என்ன?

உசியா ஒரு ராஜா. ஆனால் ஆலயத்திற்குள் நின்ற ராஜாவை யாரும் ராஜா என்று சொல்லிக் கூட அழைக்கவில்லை. பெயரைச் சொல்லி அழைத்தார்கள். உசியாவே! கர்த்தருக்கு தூபங்காட்டுவது உமக்கு கொடுக்கப்பட்டதல்ல. அந்த வேலை பரிசுத்தமாக்கப்பட்ட ஆரோனின் குமாரராகிய ஆசாரியருக்கே உரியது. பரிசுத்த ஸ்தலத்தை விட்டு வெளியேபோம். மீறுதல்செய்ய வேண்டாம். இந்தக் காரியத்தை செய்தால் உமக்கு மேன்மையாக அமையாது என்றனர். அப்பொழுது உசியா அதிக உக்கிரமாகக் கோபம் கொண்டு, மனமேட்டிமையாகி, தான் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்ற நினைவு கொஞ்சம் கூட இல்லாமல் ஆசாரியர்களின் வார்த்தைக்கும், ஆலோசனைக்கும் செவிமடுக்காமல் தூப கலசத்தை கையில் எடுத்த போது ஆசாரியருக்கு முன்பாகக் கர்த்தருடைய ஆலயத்திலே தூப பீடத்தின் முன் நிற்கிற உசியாவின் நெற்றியிலே குஷ்டரோகம் தோன்றிற்று.

அதிகாரத்தில் இருப்பவர்கள் தங்களை சட்டத்திற்கு மேலானவர்களாகக் கருதி, தாறுமாறாக நடந்து கொள்வார்கள். எல்லோரும் கர்த்தருக்குக் கீழ்ப்பட்டவர்களே. ஒருவனுக்கு குஷ்டரோகம் வந்தால், அவனை ஊரைவிட்டு வெளியே அனுப்புவது ஆசாரியனுடைய வேலை. அப்படி ஊரை விட்டு வெளியே அனுப்பப்பட்டவர்கள் கர்த்தரின் கிருபையினால் சுகம் பெற்றால், மோசேயின் நியாயப் பிரமாணத்தின்படி அவர்கள் திரும்பவும் ஆசாரியனைப் பார்த்து, பரிபூரண சுகம் என்ற சான்றிதழை பெற்றால்தான் ஊருக்குள், தங்கள் வீட்டிற்குள் செல்ல முடியும். குஷ்டரோகம் வந்தவர்களுக்கு ஆசாரியர்கள் இப்பேர்ப்பட்ட கட்டுப்பாடுகளை வைத்திருந்த காரணத்தினால், கர்த்தருடைய ஆலயத்தில் தூபபீடத்தின் முன்னாக உசியா ராஜா குஷ்டரோகத்தால் நின்றிருப்பதைக்

கண்ட ஆசாரியர்கள் பதறிப் போயினர். ஆலயத்திலிருந்து வேகமாக வெளியே போகுமாறு துரிதப்படுத்தினார்கள்.

உசியா ராஜாவும் மேட்டிமையின் விளைவினால் கர்த்தர் தன்னை அடித்ததினால் ராஜாவும் வெளியே செல்லத் தீவிரப்பட்டான். அவரவர்கள் வேலையை அவரவர்கள் தான் செய்ய வேண்டும்.

ஒரு கார் மெக்கானிக் ஓடாத ஒரு வாகனத்தை சரி செய்ய வேண்டுமானால், சரி செய்துவிட முடியும். அதேசமயம் பழுதான அந்த வாகனத்தை ஒரு சாதாரண மனிதன் போய் சரி செய்வானேயாகில், அந்த வாகனம் கெட்டுப் போய்விடும். அதுபோலத்தான் மனமேட்டிமையை விடாமல், ஆசாரியர்களின் பேச்சைக் கேளாமல் தன்னைப்பற்றி அதிகமாக/உயர்வாக கருதியதால் கர்த்தர் அடித்த அடியில் உசியா ராஜாவின் உடல் கெட்டுப் போனது. சாகும் வரையில் ஊருக்கு வெளியே தனியாக ஒரு வீடு எடுத்து தங்கி அங்கேயே மரித்துப் போனார். தொழுநோயினால் விழுந்து போனதற்கு முன்னாக வந்த மனமேட்டிமையினால் கல்லறையில் தன்னுடைய பிதாக்கள் மற்றும் ராஜாக்கள் அடக்கம் பண்ணப்பட்ட இடத்தில் வைக்காமல் அந்த இடத்திற்கு அருகில் உள்ள இடத்தில் உசியா ராஜா அடக்கம் செய்யப்பட்டார்.

## கற்றுக்கொள்ள வேண்டிய பாடம்

*தான் என்ற எண்ணத்தை தூக்கி எறிவோம். மனமேட்டிமையை உள்ளத்திலிருந்து அழிப்போம். மனிதன் அடிக்கும் அடி மறைந்து போகும். கர்த்தர் அடிக்கும் அடி நம் வாழ்நாள் இறுதிவரை காணப்படும். கர்த்தருக்குப் பயப்படுவோம். உசியாவின் வாழ்விலிருந்து கர்த்தர் விரும்பும் மனமாற்றம் பெறுவோம்.*

இறுதியில் உசியா இத்தனை தவறானதைச் செய்தாலும் அவரது நாட்களில் கர்த்தரை விட்டு பின்வாங்காமலிருந்தார். உசியா மரணமடைந்த ஆண்டில் ஏசாயா கர்த்தரைத் தரிசித்தான் (ஏசாயா 6 : 1-13).

## 3. பணத்தினாலே வந்த மனமேட்டிமை

மனிதனுக்கு எதிலே மேட்டிமை வருமோ, வராதோ கொஞ்சம் பணம், காசு சேர்ந்து விட்டால் கையிலே பிடிக்க முடியாது. அற்பனுக்கு வாழ்வு வந்தால், அர்த்த ராத்திரியிலும் குடை பிடிப்பான் என்ற பழமொழிக்கேற்ப மாறி விடுவான். அதுபோலத்தான் இயேசு கிறிஸ்துவின் சீடர்களில் ஒருவனான யூதாஸின் வாழ்க்கையும் பணம் மற்றும் பதவியால் வந்த மேட்டிமையினால் ஜீவனே விழுந்து போனது.

கர்த்தரால் தேர்ந்தெடுக்கப்பட்ட பன்னிரு சீடர்களில் ஒருவர். நற்செய்தி பணி செய்தல், அற்புதங்கள் செய்தல், நோயுற்றோரை சுகமாக்குதல், பிசாசுகளைத் துரத்துதல் போன்ற அநேகக் காரியங்களை தனிப்பட்ட முறையிலும், இயேசு கிறிஸ்துவோடும் கூட சேர்ந்து ஊழியம் செய்துள்ளனர். கர்த்தரை காட்டிக் கொடுப்பதற்கு கர்த்தர் தங்கும் இடத்தை அறிவிப்பதற்கு யாரும் முன்வராத நிலையில் ஆசாரியர்களை அணுகி, பேரம் பேசி, திட்டம் வகுத்து அதற்கான கைக்கூலியாக முப்பது வெள்ளிக்காசைப் பெற்றுக் கொண்டான். நயவஞ்சகத்தின் உச்சக்கட்டமாக முத்தத்தினால் காட்டிக் கொடுப்பதென்று தன் உள்ளத்திலே திட்டம் தீட்டினான்.

ஆனால், இயேசுவானவருக்கு தன்னைக் காட்டிக் கொடுக்கப் போகிறவன் யார் என்று தெரிந்த போதிலும் யூதாஸிடம் எதுவும் கேட்கவும் இல்லை, பேசவும் இல்லை. அதேசமயம் மனம் திரும்புவதற்கு யூதாசுக்கு சந்தர்ப்பம் கிடைத்த போதிலும் அதை நழுவவிட்டான்.

## சந்தர்ப்பம் கிடைத்த சமயம்

அவர்கள் போஜனம் பண்ணுகையில் அவர் : உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அப்போது யூதாஸ் இயேசுவை நோக்கி ரபீ, நானோ என்றான். அதற்கு இயேசு : நீ சொன்னபடிதான் என்றார். அவர்கள் போஜனம் பண்ணும் போது, தன்னுடைய கையினால் உணவை எடுத்து யூதாசுக்கும் கொடுத்து

அவனுக்கு உயர்வளித்தார். ஆனால் யூதாஸ், மனம் திரும்புவதற்கு கிடைத்த முதல் வாய்ப்பை இழந்தான்.

இரண்டாவதாக இயேசுவை காட்டிக் கொடுக்கும் தருணத்தில் **சிநேகிதனே** என்று இயேசுவானவர் அழைத்த சமயம் யூதாஸ் உள்ளத்தால் குத்தப்பட்டிருக்கலாம். ஆனால், மனம் மாற்றமடையவில்லை.

நாம் மனம் மாறுவதற்கு எத்தனையோ சந்தர்ப்பங்கள் நமக்கு கர்த்தரால் கொடுக்கப்படுகிறது. நாமும் யூதாஸைப்போல் அநேக முறை தவறவிடுகிறோம். ஒரு தடவைதான் கர்த்தர் கதவைத் தட்டுவார். நாம் தெளிவாகிக் கொள்ள வேண்டும். அடுத்த தடவை, அடுத்த முறை என்று கடந்து செல்வோமானால் மீண்டும், மீண்டும் கர்த்தர் நம் வீட்டின் கதவைத் தட்டுவார் என்ற நினைப்பை நாம் மறந்து விடுவது நல்லது.

## <u>பிலாத்து எழுதிய தீர்ப்பு</u>

ராஜாதி ராஜாவான இயேசுவுக்கு பிலாத்து மரண தண்டனை எழுதி மக்களிடம் ஒப்படைத்தான். இவ்வளவு பெரிய ஆக்கினையை இயேசுவானவருக்கு தீர்ப்பு செய்யப்படுமென்று யூதாஸ் எதிர்பார்க்கவில்லை. மத். 27 : 2-இல் அவரைக் காட்டிக் கொடுத்த யூதாஸ், இயேசுவானவர் மரண ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதைக் கண்டு மனஸ்தாபப்பட்டான். ஆனால், கல்வாரியின் அருகில் சென்று மன்னிப்பு கேட்க முயற்சி செய்யவில்லை.

## <u>யூதாசுக்கு எப்படி பண ஆசை வந்தது?</u>

இயேசுவின் பன்னிரு சீடர்களில் யூதாஸ் அதிகம் படித்தவன். கலிலேயன் அல்ல. ஆகவேதான் கிறிஸ்துவானவர் தாமாக அவன் நன்கு செயல்படக் கூடியவன் என்று கருதி அவனுக்கு பொருளாளர் (Treasurer) பதவியைக் கொடுத்தார். யூதாஸ் எப்போதும் பணப்பையும்; கையுமாகத்தான் காணப்படுவான்.

ஒருசமயம் இயேசுவானவர் பெத்தானியாவில் சீமோன் வீட்டில் இருந்தபோது, ஒரு ஸ்திரீ விலையேறப் பெற்ற பரிமளத்தைலத்தை (நளதம்) உடைத்து, அந்தத் தைலத்தை இயேசுவின் சிரசின்மேல் ஊற்றினாள். அதைக்கண்ட யூதாஸ் விசனமடைந்து, இந்த வீண் செலவு என்னத்திற்கு, இந்த தைலத்தை உயர்ந்த விலைக்கு விற்கலாமேயென்று நினைத்தான். காரணம், யூதாஸ் எவ்விதத்தில் தனக்குப் பணம் வந்தாலும் சரி, அதை தன்னிடம் வைத்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்துடன் வாழ்ந்த ஒரு பணப்பிசாசு. ஆகவேதான், அந்த முப்பது வெள்ளிக்காசினால் ஒரு பாவமும் அறியாத ஆண்டவரைக் காட்டிக் கொடுத்தான். அந்தப் பணத்தின் ஆசையினால், அவனுக்கு கொடுக்கப்பட்ட பொருளாளர் பதவியும் பறிபோனது. விழுந்தும் போனான். மேட்டிமை விழுதலுக்கு முன்னாக வந்து, அழிவைத் தந்தது.

## <u>யூதாஸின் மரணம்</u>

ஆண்டவருக்கு அளிக்கப்பட்டத் தீர்ப்பை அறிந்து மனங்கசந்தான். குற்றமில்லாத இரத்தத்தைக் காட்டிக் கொடுத்ததினால் பாவம் செய்தேன் என்று அந்த முப்பது வெள்ளிக்காசையும் கொண்டுபோய் பிரதான ஆசாரியனிடத்திற்கும், மூப்பரிடத்திற்கும் கொடுக்க முற்பட்டான். அவர்கள் திரும்ப வாங்காதபடியால் அந்த முப்பது வெள்ளிக் காசையும் தேவாலயத்திலே எறிந்துவிட்டு **நான்று கொண்டு செத்தான்.** அந்த முப்பது வெள்ளிக்காசை காணிக்கைப் பெட்டியில் போடலாகாதென்று, அந்நியரை அடக்கம் செய்வதற்கு ஒரு குயவனுடைய நிலத்தை அதினாலே வாங்கியதால் அது இந்நாள் வரைக்கும் இரத்த நிலம் எனப்படுகிறது (The field of Blood).

முதலாவது தலைப்பிலே ஆண்டவருடைய வீட்டிற்கு ஏன் செல்லுகிறோமென்றால் அவரோடு பேச, நம்முடைய கவலைகள், கஷ்டங்களையெல்லாம் கர்த்தரிடம் ஏறெடுத்து, நல்ல ஆலோசனைகளைப் பெற்று, மன சமாதானத்தோடு வருவதற்குத்தான் ஆண்டவரை அவரது வீட்டில் சந்திக்கப் போகிறோம். நம்மைப் பற்றி தற்பெருமையாய், மேட்டிமையாய், அடுத்தவர்களைப் பற்றி பேசுவதற்கு உரிய இடமாக

ஆண்டவருடைய ஆலயத்தை மாற்ற முயல்வது சரியல்ல. வாலிபப் பிள்ளைகளுக்காக, கைவிடப்பட்ட பிள்ளைகளுக்காக, ஏழை விதவைகளுக்காக, சபையின் வளர்ச்சிக்காக நாம் கர்த்தரிடம் பேசுவோமானால், நம்மை எந்தச் சூழ்நிலையிலும் கீழே விழாமல் கரம் பிடித்து காப்பாற்றுவார்.

**மேல்படிக்கு** முதல்படி **கீழ்ப்படி.** ஒரு வீட்டின் மாடிக்குச் செல்ல வேண்டுமானால் கீழே உள்ள படிகள் எல்லாவற்றையும் கடந்து வந்தால்தான் மாடிக்கு வரமுடியும். வேதாகமத்திலே முதலாவதாக ஏதேன் தோட்டத்தில் கர்த்தருடைய சந்நிதியை விட்டு ஆதாமும் ஏவாளும் வெளியே வரக்காரணம், தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் போனதே. போதும் என்ற எண்ணத்துடன் மனிதன் வாழ்வது கிடையாது. இன்னும் வேண்டும், இதற்கு மேலும் வேண்டும் என்று நினைப்பது தான் எந்த இடத்தில் வேண்டுமானாலும் விழுதலுக்கு கொண்டுபோய் விடும். ஒரு மனிதனுக்கு அரசர் என்ற உயர்ந்த முதல் பதவி கிடைப்பதே மிகப்பெரிய பாக்கியம். அதற்கு மேலே ஒரு தேசத்தில் உயர்ந்த பதவி கிடையவே கிடையாது. இந்த உசியா ராஜாவுக்கு அரசர் பதவி மட்டும் போதாது. ஆலயத்தில் தூபகலசம் காட்டும் வேலையைச் செய்யும் ஆசாரியர்கள் பொறுப்புகளையும் தான் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று பேராசையின் உச்சக்கட்டமாக, மனதிலே மேட்டிமை கலந்ததால் தோல் வியாதியினால் கர்த்தரிடம் அடிவாங்கினார். விழுந்த உசியா மரணம்வரை எழுந்திருக்க வில்லை.

இறுதியாகப் பார்ப்பது, பணத்தினால் மனமேட்டிமை வந்தால் மனிதன் தன் ஜீவனைக் கூட மாய்த்துக் கொள்ளும் அளவுக்கு விழுந்து விடுவான் என்று யூதாசின் வாழ்க்கை நமக்கு நினைப்பூட்டுகிறது. திசைமாறிய பறவை போல நிம்மதியை இழந்தான். பண விஷயத்தில் கீழே விழாமல் நம்மை நாமே நிதானித்து வாழ்வோமாக!

ஆமென்.

**– திருமதி. பேர்ல்குயில் ராஜா**

---

# உலகச் செய்திகள்

1. தமிழகத்தைப் பொறுத்தவரை மொத்தம் 35 அமைச்சர்கள் வரையில் நியமிக்க அரசமைப்புச் சட்டத்தில் உச்சவரம்பு உள்ளது. அதன்படி, தமிழக அமைச்சரவையில் த.வெ.க. சார்பில் 31, காங்கிரஸ் சார்பில் 2, விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் 1 மற்றும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி சார்பில் 1 என 35 பேர் இடம் பெற்றுள்ளனர்.

2. புல்வாமா பயங்கரவாத தாக்குதலில் மூளையாக செயல்பட்டதாகக் கருதப்படும் பயங்கரவாதியான அர்ஜுமந்த் குல்சார் தார் (ஏ) ஹம்ஸா புர்ஹான், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

3. கோவை சின்னத்தடாகம் அருகே வரப்பாளையத்திலுள்ள டாக்டர் பி.ஜி.வி. மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவிகள் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் நூறு சதவீதம் (100%) தேர்ச்சி பெற்றுள்ளனர்.

4. நேபாளத்திலிருந்து உலகின் மிக உயர்ந்த எவரெஸ்ட் சிகரத்தை ஒரேநாளில் 3 இந்தியர்கள் உட்பட 274 மலையேற்ற வீரர்கள் வெற்றிகரமாக அடைந்து புதிய உலக சாதனை படைத்துள்ளனர்.

5. உள்நாட்டுப்போர் நடைபெறும் மியான்மரில், இந்தியா மற்றும் தாய்லாந்து எல்லைகளையொட்டிய 2 முக்கிய நகரங்களை கிளர்ச்சியாளர்களிடமிருந்து இராணுவம் மீட்டுள்ளது.

# ஆசிரியர் மடல்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான, அன்பான சகோதர, சகோதரிகளுக்கு சத்திய வார்த்தை பத்திரிகையின் சார்பாக எங்கள் அன்பின் வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**''கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது; தீமை செய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது'' (1 பேதுரு 3 : 12).**

நாம் வாசிக்கிற இந்த புதிய ஏற்பாட்டின் காலத்திலே யார் நீதிமான்கள் என்று பரிசுத்த வேதாகமம் சொல்கிறது? ரோமர் 5 : 19-ல் வாசிக்கும் பொழுது **''ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டது போல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்''** என்று வாசிக்கிறோம்.

ஏதேன் தோட்டத்திலே புசிக்க வேண்டாம் என்று தேவன் விலக்கின விருட்சத்தின் கனியை ஆதாம் புசித்து தேவ கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் போனபடியால், ஒட்டுமொத்த மனுக்குலமும் சாபத்திற்கும், பாவத்திற்கும் உள்ளானது. பிதாவாகிய தேவனுக்கு, இயேசு கிறிஸ்து சிலுவை பரியந்தம் கீழ்ப்படிந்து, தன் ஜீவனை ஒப்புக் கொடுத்ததால், அவரை விசுவாசித்து ஏற்றுக்கொண்டு பாவங்களை அறிக்கை செய்து விட்டுவிடுகிற நாம் யாவரும் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்படுகிறோம். அப்படிப்பட்ட நீதிமான்களாகிய நம்மேல்தான் கர்த்தருடைய கண்கள் நோக்கமாயிருக்கிறது. ஒரு தாய் தன் குழந்தையின் மீது எப்படி எப்பொழுதும் கவனமாயிருந்து, அதற்கு எந்த தீமையும் நேரிடாமல் பாதுகாத்து கொள்கிறாளோ, அதேப்போல் நீதிமான்களாகிய நம்மையும் கூட, கர்த்தர் இந்த உலகத்திலே சத்ரு நமக்கு விரோதமாக செய்ய நினைக்கிற எல்லாத் தீமைக்கும் விலக்கிக் காப்பார்.

கர்த்தருக்கு மிகவும் அருவருப்பான பாவமாகிய ஓரினசேர்க்கை என்ற பாவம் நிறைந்ததாயிருந்தது, சோதோம் கொமோரா பட்டணம். நீதிமான்களாகிய லோத்து சோதோம் கொமோரா பட்டணத்தில் நடக்கிற பாவ காரியங்களைக் கண்டு, நாள்தோறும் தன் இருதயத்தில் வாதிக்கப்பட்டான். கர்த்தர் சோதோம் கொமோரா பட்டணத்தில் பாவம் கொடிதாயிருந்ததால் அதை அழிக்க சித்தமானார். ஆனால், அந்த பட்டணத்தில் வாசமாயிருந்த லோத்துவையும் அவன் குடும்பத்தையும் அந்த அழிவிலிருந்து காப்பாற்றினார்.

நோவாவின் காலத்திலே வாழ்ந்தவர்களிலே நோவா நீதிமானும் உத்தமனுமாயிருந்தான். அந்நாட்களிலே பூமி கொடுமையினால் நிறைந்திருந்தது. அப்பொழுது கர்த்தர் நான் சிருஷ்டித்த மனிதனைப் பூமியின்மேல் வைக்காமல், மனிதன் முதற்கொண்டு, மிருகங்கள், ஊரும் பிராணிகள், ஆகாயத்துப் பறவைகள், பரியந்தமும் உண்டாயிருக்கிறவைகளை அழித்துப் போடுவேன்; நான் அவர்களை உண்டாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது என்றார். ஆனால் நோவாவுக்கோ, கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது. கர்த்தர் ஜலப்பிரளயத்தினால் பூமியை அழித்தபோது, நோவாவும் அவன் குடும்பமும் பேழைக்குள் பிரவேசித்து அந்த அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டார்கள்.

ஆபத்து நிறைந்த கடைசி நாட்களிலே நாம் இந்த உலகத்திலே வாழ்கிறோம். போர்களும், கொள்ளை நோய்களும், பலவிதமான பஞ்சங்களும், வேலை இழப்புகளும், இயற்கை பேரழிவுகளும் நம்மை சேதப்படுத்தாதபடி அதிலிருந்து காக்கும்படி கர்த்தருடைய கண்கள் நம்மேல் நோக்கமாயிருக்கிறது.

**"தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிற–வர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது...'' (2 நாளா. 16 : 9).**

கடந்த ஏப்ரல் மாதம் 26-ஆம் தேதியன்று கோவை, போத்தனூர் CSI யூனியன் சபையில் TELC சபையின் முன்னாள் பேராயர் Rt. Rev. பிஷப்

எட்வின் ஜெயக்குமார் ஐயா அவர்கள் IBTசார்பாக தேவ செய்தியும், IBT-ன் பொருளாளர் திரு. M. ஜான் வில்லியம் அவர்கள் IBTஊழிய விளக்கமும் கொடுத்தார்கள். சந்தர்ப்பம் கொடுத்து, காணிக்கையும் வழங்கிய சபை ஆயர், சபை செயலாளர், பொருளாளர் மற்றும் பங்குபெற்ற சபை மக்கள் அனைவருக்கும் IBT நன்றி கூறுகிறது.

IBT-இன் வருடாந்தர உபவாச ஜெபக்கூட்டம் மே மாதம் 8, 9 ஆகிய தேதிகளில் கோவை, IBT மையத்தில் நடைபெற்றது. பல ஊர்களிலுள்ள IBT-இன் ஊழியர்கள் கலந்து கொண்டார்கள். கேரளா, திருச்சூரில் உள்ள முன்னேற்றப் பணியாளர் சகோ. ரெஜி ஜெல்லிப்பாராவும் கலந்து கொண்டார்.

முதல் நாள் காலையில் திரு. S. தீமோத்தி அவர்களும், மதியம் திரு. S.N. சங்கர் அவர்களும் தேவ செய்தியளித்தனர். இந்நாளில் IBT ஊழியங்களுக்காகவும், தாங்குநர்களுக்காகவும், பங்காளர்களுக்காகவும் மற்றும் பொது ஜெபக்குறிப்புகளுக்காகவும் ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டன. IBT ஊழியர்கள் தங்கள் பணிகளைக் குறித்து விளக்கமளித்தார்கள்.

இரண்டாம் நாளில் கோவையில் தனியாக ஊழியம் செய்து வரும் திரு. ஆரோக்கிய ராஜ் அவர்களும், உடன் ஊழியரும் பங்குபெற்றதோடு, துதி ஆராதனையும், தேவ செய்தியும் கொடுத்தார்கள்.

இக்கூடுகை மதியம் 2 மணிக்கு நிறைவு பெற்று, பங்குபெற்ற அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

IBT ஊழியங்களுக்காக அனுதினமும் மறவாமல் ஜெபியுங்கள். திட்டமிட்டுள்ளபடி அதிகமான புத்தகங்கள் 2028 லோகோஸ் முகாமில் வெளியிடும்படி பணிகள் துரிதமாய் நடக்கவும் ஜெபியுங்கள்.

கர்த்தர் உங்கள் அனைவரையும், உங்கள் பிள்ளைகளையும் தம் செட்டையின் மறைவில் பாதுகாத்து வழிநடத்துவாராக!

ஷாலோம்!

கர்த்தருக்குள் அன்பான
உங்கள் சகோதரன்
**K. ஜெய்சிங்**

## எமது தரிசனமும், எமது பணியும்

**<u>எமது தரிசனம் :</u> "இதுவரை மொழி பெயர்க்கப்படாத அனைத்து இந்திய மொழிகளிலும் வேதாகமம் மொழி பெயர்க்கப்பட்டு ஒவ்வொரு சமூகமும் தங்களது தாய்மொழியில் கடவுளுடைய வார்த்தைகளை கிடைக்கும்படி செய்வதே"**

**<u>எமது பணி :</u> கடவுளுடைய வார்த்தையை, இதுவரை வேதாகமம் இல்லாத அனைத்து இந்திய மொழிகளில் மொழிபெயர்த்து, அச்சிட்டு, போதிப்பது. மொழிவாரியாக இந்தியாவின் அனைத்துப் பகுதிகளுக்கும் வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் / மிஷனெரிகளை அனுப்புதல் மற்றும் ஒவ்வொரு மொழிக்கும் "ஒரு வேதாகம மொழிபெயர்ப்பாளர் குழுவை" அமைத்து அனுப்புதல்.**

## மிஷனெரி குழந்தைகளுக்குக் கல்வி நிதி

IBT இயக்கமானது ஒவ்வொரு ஆண்டும் நமது மிஷனெரிகளின் பிள்ளைகளுக்குக் கல்வி உதவித் தொகை வழங்கி வருகிறதை நீங்கள் அறிவீர்கள். 2026-27 ஆம் கல்வி ஆண்டிற்கு பிள்ளைகளின் படிப்பிற்காக உதவித் தொகை ரூ. 3 இலட்சம் தேவைப்படுகிறது. IBT பங்காளர்கள், சத்திய வார்த்தை வாசகர்கள் மற்றும் ஊழிய பாரம் கொண்ட அனைவரும் மனமுவந்து உற்சாகத்துடன் நிதி உதவி வழங்கி பிள்ளைகளின் படிப்பிற்கான செலவுகளைத் தாங்க முன் வாருங்கள்.

– பொருளாளர், IBT

# பணித்தளச் செய்திகள்

**மொழிபெயர்ப்பாளர் : சகோ. S.N. சங்கர்**
**மொழி : சௌராஷ்ட்ரா**
**பணித்தளம் : திருச்சி (தமிழ்நாடு)**

கர்த்தருக்கே துதி உண்டாவதாக!

மொழிபெயர்ப்புப் பணியில் பழைய ஏற்பாடு பாகம் நீதிமொழிகள் புத்தகத்தில் அதிகாரம் 16 முதல் 31 வரை சரிபார்ப்பு செய்யப்பட்டன. இம்மொழியிலுள்ள வேதாகமத்தைப் படிப்பவர்கள் கூறிய சில வார்த்தைகளும் Paratext-இல் மாற்றப்பட்டன. ஏப்ரல் மாதம் 5-ஆம் தேதியன்று தஞ்சாவூர் சென்று அங்குள்ள WUE சபையில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலைப் பற்றியும், அவரைப் பின்பற்றி வாழ்வது குறித்தும் விளக்கிக் கூறினேன். இதே மாதம் 7-ஆம் தேதி முதல் 11-ஆம் தேதி வரையில் ஒட்டஞ்சத்திரத்திலுள்ள MUT மூலமாக நடத்தப்பட்ட எழுத்தாளர் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டேன். கர்த்தரின் அழைப்பின்பேரின் ஊழியத்தில் இணைந்த நான் என் வாழ்க்கை சரிதத்தை எழுத ஆரம்பித்தேன். 21-ஆம் தேதியன்று தாராபுரம் சென்று, நற்செய்திக் கூட்டத்தை ஒழுங்கு செய்தோம்.

சௌராஷ்ட்ரா வருடாந்தர கூட்டத்திற்காக வேதாகம விடுகதைகளைத் தயார் செய்தேன். நற்செய்தியை அறிவித்து, வியாதியஸ்தர்களுக்காக ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டன. சௌராஷ்ட்ரா மொழியில் பாடல்கள் எழுதினேன். வேதாகம வார்த்தை வினா விடைப் போட்டியும் நடத்தப்பட்டது. வெளியிடப்பட்ட வேதாகமத்தின் APP வெளியிடுவதற்காக பணிகள் நடந்து வருகிறது. இப்பணிகளுக்காகவும், சௌராஷ்ட்ரா மக்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

-------------------

**முன்னேற்றப் பணியாளர் : சகோ. ரெஜி ஜெல்லிப்பாரா**
**பணித்தளம் : மன்னுட்டி–திருச்சூர் (கேரளா)**

கர்த்தரின் பெரிதான கிருபையால் முன்னேற்றப் பணியை சரிவர செய்ய முடிந்தது. கடந்த மாதத்தில் முன்னேற்றப் பணிக்காக நெல்லன்காரா, சுவன்னமன்னு, கன்னங்குளங்கரா, குரா, வடக்கஞ்சேரி, சம்புக்காவ், முல்லக்கரா, மன்னுட்டி, புதுக்காடு, வெட்டுக்காடு, பரவந்தன்னி, ஐயங்கோடு, ஒல்லூர், பூங்குன்னம், குலத்தோடு, புத்தூர், கிழக்கு கோட்டை (East Fort), மரோட்டிச்சால ஆகிய இடங்களுக்குச் சென்று IBT பங்காளர்கள், தாங்குநர்களைச் சந்தித்து காணிக்கைகளைப் பெற்று, அவர்களுக்காக ஜெபித்து வந்தேன். மார்ச் மாதம் முதல் மே மாதம் வரை வெயிலின் தாக்கம் மிக அதிகமாக இருந்ததால், முன்னேற்றப் பணி செய்வது சவாலாக இருந்தது. புதியவர்கள் பலரைச் சந்தித்து ஊழியத்தைத் தாங்குவதற்குக் கேட்டும் அதிக பலனிக்கவில்லை. இதற்கு பல நாடுகளுக்கிடையேயான போர்கள் நிமித்தமாக தற்போதுள்ள பொருளாதார வீழ்ச்சி முக்கிய காரணமாக இருக்கிறது. ஏற்கனவே கொடுத்து வந்த தாங்குநர்களும் கொடுக்க இயலாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். கர்த்தரின் ஊழியம் தடைபடாமல் இருப்பதற்கு அதிக ஜெபம் தேவைப்படுகிறது. புதிதாக ஜெபக் குழுக்கள் ஆரம்பிக்கப்படவும் ஜெபியுங்கள்.

-------------------

**மொழிபெயர்ப்பாளர் : சகோ. அல்டாஃப் ஹூசைன்**
**மொழி : டிங்கால்**
**பணித்தளம் : டோங்க் (ராஜஸ்தான்)**

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துக்கள்!

கடந்த மாதம் மொழிபெயர்ப்புப் பணியில் புதிய ஏற்பாடு பாகத்தில் லூக்கா அதிகாரம் 21 : 1 முதல் அதி. 24 : 53 வசனம் வரையிலும், யோவான் அதி. 1 : 1 முதல் அதி. 21 : 25-ஆம் வசனம் வரையிலும், அப்போஸ்தலருடைய நடபடிகள் அதி. 1 : 1 முதல் அதி. 28 : 31-ஆம் வசனம் வரையிலும் Word List சரிபார்ப்பு செய்யப்பட்டன. ஏப்ரல் மாதம் 20-ஆம் தேதி முதல் 25-ஆம் தேதி வரை ஒடிசா மாநிலம் பாப்பன்பள்ளியிலுள்ள சிறுவர் இல்லத்தில்

நடைபெற்ற மொழிபெயர்ப்பாளர்களின் புதிய ஏற்பாடு சரிபார்ப்புப் பணிக்காக சென்றிருந்தேன். அதில் கலந்து கொண்டது, சரிபார்ப்புப் பணிக்கு பெரிதும் உதவியாக இருந்தது. அடுத்த லோகோஸ் முகாமில் இந்த டிங்கால் மொழியிலும், புதிய ஏற்பாடு சங்கீதம், நீதிமொழிகள் வெளியிட, பணிகள் துரிதமாக நடந்து வருகின்றன. இதற்காகவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

--------------------

<u>மொழிபெயர்ப்பாளர் : சகோ. சாமுவேல்</u>
<u>மொழி : இருளா – வெள்ளியங்காடு</u>
<u>பணித்தளம் : வட்டலக்கி (கேரளா)</u>

தேவனுக்கே மகிமையுண்டாவதாக!

கடந்த மாதம் வேதாகம மொழிபெயர்ப்புப் பணியில் மொழிபெயர்க்கப்பட்ட சங்கீத புத்தகம் மறுவாசிப்பு சரிபார்ப்புப் பணி நடைபெற்று வருகிறது. சங்கீதம் 1 முதல் சங்கீதம் 125 வரை முடிந்துள்ளது. மேலும் கிராமங்களுக்குச் சென்று, இருளா வெள்ளியங்காடு மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட புதிய ஏற்பாடு புது நியம என்ற பெயரில் வெளியிட்ட புத்தகமும், கைப்பிரதிகளும் ஆதிவாசி ஜனங்களுக்கு விநியோகம் செய்தேன். கொடுக்கப்பட்ட புத்தகங்களை வாங்கிய மக்கள், அனுதினமும் வாசித்து, மனம் திரும்பவும், அவர்கள் வாழ்க்கையில் கடைப்பிடித்து வரும் பாரம்பரிய செயல்கள் மாறவும் வேண்டும். அவர்களுக்கு ஆலோசனை சொல்லும்போது, சரி என்று ஏற்றுக் கொண்டாலும், கடைபிடிப்பது இல்லை என்ற பழைய நிலையே உள்ளது. இது அவர்களின் மாம்சீக பெலவீனம். இவர்கள் போதை மருந்து, மதுபானப் பழக்கம் போன்றவற்றிலிருந்து பூரணமாக விடுதலை பெற வேண்டும். இது அவர்களின் தலைமுறையான பழக்கமாக இருந்து வருகிறது. இதை சாதனை என்று பெருமையுடன் கூறுகிறார்கள்.

இந்த அறியாமையின் கட்டுகள் அவிழ்க்கப்பட வேண்டும். இம்மக்கள் அனைவரும் இரட்சிப்புக்குள் வரவேண்டும். இவர்களின் மனமாற்றத்திற்காகவும், எங்கள் குடும்பத்தினரின் சுகத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

--------------------

<u>முன்னேற்றப் பணியாளர் : சகோ. S. ராஜன்</u>
<u>பணித்தளம் : ஈரோடு (தமிழ்நாடு)</u>

கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

கடந்த மாதங்கள் முழுவதும் பாதுகாப்பான வழிப்பயணங்களைத் தந்து முன்னேற்றப் பணியை நன்கு செய்ய கிருபையளித்த கர்த்தருக்கு நன்றிகளை ஏறெடுக்கிறேன். முன்னேற்றப் பணிக்காக சூரம்பட்டி, நால்ரோடு, ஆசிரியர் காலனி, பெரியார் நகர், குமலன்குட்டை, புதுப்பாளையம், New Teacher's Colony, நசியனூர், சித்தோடு, எல்லிஸ்பேட்டை, கவுந்தப்பாடி, கோபி, பெருந்துரை டவுன், பெருந்துரையிலுள்ள ஆனந்த நகர், கூட்டுறவு நகர், சிலேட்டர் நகர், சமாதானபுரம், பட்டக்காரன்பாளையம், முத்தம்பாளையம்-I, II, III பகுதிகள், ரங்கம்பாளையம், கொல்லம்பாளையம், பாரதி நகர், சோலார் வசந்த நகர், லக்காபுரம், கன்றுடையாம்பாளையம், பள்ளிபாளையம், கருங்கல்பாளையம், தாஜ் நகர், சீளுபுரம், கொம்மன் கோயில், அவல்பூந்துரை, எழுமாத்தூர், மண்காடு, பொன்னம்பாளையம் ஆகிய கிராமங்களுக்குச் சென்று IBT பங்காளர்களையும், தாங்குநர்களையும் சந்தித்து, காணிக்கைப் பெற்று, அவர்களுக்காக ஜெபித்து வந்தேன். லெந்துகாலக் கூட்டங்களில் IBT மூலமாக தேவ செய்தியும், ஊழிய விளக்கமும் கொடுக்கப்பட்ட நாட்களில் 20 பேர் "சத்திய வார்த்தை" பத்திரிகைக்கு வாசகர்கள் கிடைத்துள்ளனர். கடுமையான வெப்ப நாட்களில் உடல் நிலை பாதிக்காவண்ணம் கர்த்தர் பாதுகாத்து வழி நடத்தி வருகிறார். அதிகமான சபைகளில் IBT ஊழியம் அறிமுகப்படுத்தப்படவும், என் முன்னேற்றப் பணிக்காகவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

--------------------

<u>மொழிபெயர்ப்பாளர் : சகோ. கடாமண்டல்</u>
<u>மொழி : சோரா</u>
<u>பணித்தளம் : பரலக்காமண்டி (ஒடிஷா)</u>

கர்த்தரின் நாமம் மகிமைப்படுவதாக!

கடந்த மாதம் மொழிபெயர்ப்புப் பணியில் வார்த்தைத் தொகுப்பு, எழுத்துப் பிழைகள், ஒத்த வாக்கியங்கள் சரிபார்ப்பும், புத்தக அறிமுகம் சரிபார்ப்பு ஆகியன பாராடெக்ஸ்டில் சரிசெய்யப்பட்டது. சரிபார்ப்பு செய்யப்பட்ட

புத்தகங்கள் சங்கீதம், நீதிமொழிகள், ஒத்த வாக்கியம் சரிபார்ப்பு மாற்கு முதல் கலாத்தியர் புத்தகம் வரை செய்யப்பட்டன. ஏப்ரல் மாதம் ஒடிஷா பாப்பன்பள்ளி சிறுவர் இல்லத்தில் நடைபெற்ற புதிய ஏற்பாடு சரிபார்ப்புப் பணியில் ஒரு உதவியாளரோடு கலந்து கொண்டேன். இதுவரை முடிக்கப்பட்ட அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தின் அதிகாரங்கள் வாசித்து காண்பிக்கப்பட்டு சரிசெய்யப்பட்டன. IMS ஊழியத்திலுள்ள திருமதி. கிரிஜா அவர்கள் இப்பணியை ஆய்வு செய்து, ஆலோசனை கொடுத்தார்கள். ஞாயிற்றுக்கிழமை பத்சம் சபைக்குச் சென்று சபை ஆயர்களைச் சந்தித்து, யோவான் 19 : 26-27 வசனத்தின் அடிப்படையில் தேவசெய்தியைப் பகிர்ந்து கொண்டேன். என் மொழிபெயர்ப்புப் பணிக்காகவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

<u>மிஷனெரி : சகோதரி. சுபிதா</u>
<u>பணித்தளம் : பாப்பன்பள்ளி (ஒடிஷா)</u>

கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். மார்ச் மாதம் முழுவதும் சிறுவர் இல்லத்தில் நடைபெற்ற அனைத்து ஊழியங்களுக்குள் தேவகிருபை இருந்து வந்தது. நமது சிறுவர் இல்ல மாணவர்களுக்கு இந்த ஆண்டு இறுதித் தேர்வு நடைபெற்றது. பிள்ளைகளை தினமும் படிக்க வைத்தோம். காலை, மாலை ஜெபம் நடத்தி பிள்ளைகளுக்கு தேவ அன்பை போதித்து வருகிறோம். 10 மற்றும் 12-ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் தேர்வு முடிந்தது. சில நாட்கள் பிள்ளைகளுக்கு காலை (6.00 - 11.30) மணி வரை வகுப்புகள் நடைபெற்றன. பிள்ளைகள் வளாகத்தை சுத்தம் செய்தார்கள். உற்சாகமாக பிள்ளைகள் தோட்ட வேலை செய்து நீர் பாய்ச்சினார்கள்.

2026-2027-ஆம் கல்வியாண்டிற்கான மாணவர் சேர்க்கை ஏப்ரல் மாதத்தில் நடைபெற்றது. இக்கல்வியாண்டில் 100 பேர் உள்ளார்கள். இந்த கல்வியாண்டில் நமது சிறுவர் இல்லத்திலிருந்து வெளியே போகும் பிள்ளைகளுக்காகவும், புதிதாக வரும் பிள்ளைகளுக்காகவும் ஜெபியுங்கள். நமது சிறுவர் இல்ல ஊழியங்கள் மற்றும் ஊழியர்களின் குடும்பங்களுக்காகவும், சிறுவர் இல்ல பிள்ளைகளின் இரட்சிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

# “200 மொழிகளில்...” திட்டம்

## தேவனுக்கென்று எடுக்கப்படும் ஒரு தீரமானத் திட்டம்! இந்தியாவை சுவிசேஷமயமாக்கும் திட்டத்தில் ஒரு புதிய கட்டம்!!

<u>“200 மொழிகளில்...” திட்டம் என்றால் என்ன?</u>

இந்தியாவில் மொத்தம் 1652 மொழிகள் பேசப்படுகின்றன. ஒரு குட்டி பாபேல்! இவைகளில் 5000 ஜனத்தொகையைக் கொண்டதும், வேதாகமமொழிபெயர்ப்பு மிகவும் அவசரமாய், அவசியமாய் இருப்பதுமான மொழிகளின் எண்ணிக்கை 200. இந்த 200 மொழிகளிலும் வேதாகமத்தை மொழிபெயர்க்கும் திட்டம் தான் “200 மொழிகளில் திட்டம்”.

<u>“200 மொழிகளில்...” திட்டம் ஏன்?</u>

“ஏனய்யா! உம்முடைய ஆண்டவர் பெரிய ஆண்டவராயிருந்தால், ஏன் என்னுடைய பாஷையிலே அவர் பேசமாட்டாரா?” என்று கேட்கும் பழங்குடியினரின் கூக்குரலின் எதிரொலிதான் “200 மொழிகளில்...” திட்டம்.

ஆம்! இன்று இயேசு ஒரு பழங்குடியினர் இல்லத்திற்குள் நுழைந்தால், அவர்களுடைய தாய்மொழியில் தானே தன்னுடைய கல்வாரியின் அன்பைக் கூறுவார். நாமும் இயேசுவின் வழியைப் பின்பற்றுவோம்!

<u>உங்கள் பங்கு!</u>

200 மொழிகளில் வேதாகமம் உடனடியாக மொழிபெயர்க்கப்பட வேண்டும்!

இன்னும் பல கோடி இந்தியர்கள் தேவனுடைய வார்த்தைக்காக ஆவலோடு காத்திருக்கிறார்கள்!

தாய்மொழி வேதாகமம், உங்களுக்கு மட்டும் தான் உரிமையா?

சிந்திப்பீர்! செயல்படுவீர்!! இன்றே... இப்பொழுதே!!!

இந்திய திருச்சபை சரித்திரத்தின் கடைசி அத்தியாயத்தை எழுதும் இந்த ‘‘200 வேதாகமமொழிபெயர்ப்பாளர்களில்’’ ஒருவராக சேர முன்வாருங்கள்!

‘‘200 மொழிகளில்....’’ திட்டத்தில் இணைந்து, ஜெபத்தினாலும், பொருளுதவியினாலும் தாங்க தயங்காதீர்கள்!

ஓரத்தில் உட்கார்ந்து வேடிக்கை பார்த்தது போதும்! களத்தில் இறங்கி கடமையை நிறைவேற்றுங்கள்!

**அனைத்து மொழியிலும் மொழிபெயர்ப்போம்! அனைவரது உரிமையையும் பாதுகாப்போம்!!**

# மகிழ்ச்சியான திருமண வாழ்க்கை

திருமணத்தின் மூலமாக இரண்டு இளம் உள்ளங்கள் ஒன்றாக பிணைக்கப்படுகிறார்கள். இரண்டு துண்டுத்தாள்களை பிணைக்க வேண்டுமானால், அதை கோந்து, பிசின் மூலமாக இரண்டையும் ஒன்றாக ஒட்டிவிட முடியும். அதுபோல இரண்டு வெவ்வேறு துண்டுத் துணிகளை இணைக்க வேண்டுமானால், தையல் மெஷினில் வைத்து, தைத்து விடலாம். இரண்டு மரத்துண்டுகளை ஒன்றோடொன்று சேர்க்க வேண்டுமானால், அதில் சில துவாரங்களைப் போட்டு, ஆசாரி, அழகாக இணையும் பகுதி கண்ணுக்குத் தெரியாமலே அபூர்வமாக ஒன்றாக சேர்த்து விடுவார்.

ஆனால், இரண்டு வித்தியாசமான இருதயங்களை ஒன்றாக இணைக்க எந்தவொரு "Heart Specialist" இருதய நோய் வல்லுநராலும், டாக்டராலும் செய்ய முடியாது.

‘‘திருமண வாழ்க்கையின் வெற்றியின் ரகசியம்” அதன் மகிழ்ச்சிக்கு காரணமான சூத்திரம் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது. கவனமாக வாசியுங்கள்.

திருமண வாழ்க்கையின் உண்மையான மகிழ்ச்சி, நல்ல மனைவியை, நல்ல கணவனை கண்டு பிடிப்பதில் அல்ல. நாமே நல்ல மனைவியாக, நல்ல கணவனாக நடந்து கொள்வதில்தான் அந்த ரகசியம் அடங்கியிருக்கிறது. The secret of successful married life does not depend upon finding a suitable partner but being a suitable partner.

இரண்டாவது ‘அன்பு’ என்ற ‘ஆயிலை’ அடிக்கடி உபயோகப்படுத்தக் கற்றுக் கொள்ளுங்கள். ஒரு ரயில் பயணத்தின் போது, அந்த ரயிலின் ஒரு பகுதியில் அடிக்கடி கிரீச், கிரீச் என்ற ஒரு சப்தம் வந்து கொண்டிருந்தது. அந்த சப்தம் ரயில் பயணிகளுக்கு சற்று கஷ்டமாக – தலைவலியாக இருந்தது. அந்த சூழலில் ஒரு பயணி எழுந்து போய் எந்த இடத்தில் கிரீச், கிரீச் என்று சப்தம் வருகிறதோ அந்த இடத்தில், தன் பாக்கெட்டிலிருந்து ஒரு ஆயில் பாட்டிலை எடுத்து, அதன் மூடியைத் திறந்து, அந்த இடத்தில் ரெண்டு சொட்டு ஆயிலை விட்டார். உடனே, அந்த கிரீச், கிரீச் என்ற சப்தம் நின்று விட்டது. பயணிகளுக்கும் தலைவலி நீங்கியது.

அவர்தனது அருகில் உள்ள பயணியிடம், பின்வருமாறு கூறினார், ‘‘இப்படித்தாங்க நம் குடும்பத்திலும் அடிக்கடி கிரீச், கிரீச் என்ற சப்தம் வரும். அந்த சமயத்தில் நாம், அன்பு என்ற ஆயிலை எடுத்து, இரண்டு சொட்டு விட்டு பின்பு – அன்பான சில வார்த்தைகளைச் சொன்னால், உடனே அந்த கிரீச், கிரீச் சப்தம் அடங்கி விடும். இதை என் அனுபவத்தில் சொல்லுகிறேன்” என்று கூறினாராம்.

இதை நடைமுறைப்படுத்த அடுத்த ரயில் பயணம் வரை நீங்கள் காத்திருக்க அவசியமில்லை. உங்கள் வீட்டிலுள்ள வாழ்க்கைப் பயணத்திலேயே கிரீச், கிரீச் சப்தம் அடுத்த முறை கேட்கும்போது, உடனே, அன்பு என்ற ஆயிலை பயன்படுத்த மறவாதீர்கள்.

**‘‘மனைவியைக் கண்டடைகிறவன் நன்மையானதைக் கண்டடைகிறான்; கர்த்தரால் தயயையும் பெற்றுக் கொள்ளுகிறான்” (நீதி.18 : 22).**

ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுக்கப் பழகுங்கள். விட்டுக் கொடுத்தவர் கெட்டுப் போவதில்லை, கெட்டுப் போகிறவர்கள் விட்டுக் கொடுப்பதில்லை.

அன்பு அனைத்தையும் பொறுத்துக் கொள்ளும், அனைத்தையும் நம்பும், அன்பு இறுமாப்பு அடையாது, எரிச்சலுக்கு இடம் கொடாது (1கொரி. 13 : 7).

– “உயிருள்ள உதாரணங்கள்” என்ற
புத்தகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டது.

# தேவை

சென்னையிலே பணிபுரியும் முன்னேற்றப் பணியாளருக்கு 1 இருசக்கர வாகனம் தேவைப்படுகிறது. தற்போதுள்ள பழைய வாகனத்தின் செலவு அதிகமாக வருவதால் புதிய வாகனம் கொடுக்க வேண்டியுள்ளது. இதற்கு ஆகும் செலவு ரூ. 1,10,000/-. இதற்கு தாங்குநர்கள் கிடைக்க ஜெபியுங்கள்.

Indian Bible Translators ஊழியங்களை காணிக்கைகளால் தாங்க விரும்புவோர் கீழே குறிப்பிட்டுள்ள வங்கிகளின் மூலமாகவும், கீழேயுள்ள **QR Code-ஐ Scan** *செய்து கைபேசி மூலமாகவும்* உங்கள் காணிக்கையை எங்களுக்கு அனுப்பலாம்.

1. **STATE BANK OF INDIA**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 30008395600 |
| Name | : | Indian Bible Translators |
| Branch Code | : | 7231 |
| Branch | : | Peelamedu |
| IFS Code | : | SBIN0007231 |

2. **INDIAN BANK**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 475742259 |
| Name | : | Indian Bible Translators |
| Branch Code | : | S107 |
| Branch | : | Peelamedu |
| IFS Code | : | IDIB000S107 |

**SCAN & PAY**

Merchant Name : Indian Bible Translators
UPI ID : INDIANBIBLE@SBI

BHIM UPI

(அனுப்பப்பட்ட விபரத்தை IBT அலுவலகத்திற்கு உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். செல் : 90470 57414 இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்)

# கீழே கொடுக்கப்பட்டுள்ள புத்தகங்கள் விற்பனைக்கு உண்டு. வாசித்துப் பயனடையுங்கள்..!

| | | |
|---|---|---|
| 1. | வானத்தின் வாசல் | ரூ. 70/- |
| 2. | வானத்தின் மன்னா | ரூ. 70/- |
| 3. | சோர்வும் தீர்வும் | ரூ. 100/- |
| 4. | பயப்படாதிருங்கள் | ரூ. 70/- |
| 5. | வேதாகமப் புத்தகங்களுக்கு ஓர் அறிமுகம் | ரூ. 60/- |
| 6. | உயிருள்ள உதாரணங்கள் | ரூ. 60/- |
| 7. | பாருக்குள் பரலோகம் | ரூ. 100/- |
| 8. | விவிலியப் பயணத்தின் விடிவெள்ளி | ரூ. 100/- |
| 9. | தேவ சத்தம் | ரூ. 100/- |
| 10. | Word of Life (ஆங்கிலம்) | ரூ. 100/- |
| 11. | Word of Life (மலையாளம்) | ரூ. 100/- |
| 12. | Introduction to the Books of the Bible | ரூ. 70/- |
| 13. | Defeat the Despair (ஆங்கிலம்) | ரூ. 100/- |
| 14. | Seeds for the Good Soil (ஆங்கிலம்) | ரூ. 120/- |
| 15. | சத்திய வார்த்தையின் முத்துக்கள் | ரூ. 120/- |
| 16. | இதய கீதங்கள் (பாடல் புத்தகம்) | ரூ. 60/- |

IBT வெளியிட்டுள்ள புத்தகங்களை தபால் மூலம் பெற விரும்புவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள் – செல் : 90470 57414. நேரிடையாக, எங்கள் முன்னேற்றப் பணியாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகங்கள் ஆவிக்குரிய வாழ்விற்கும், சமுதாய வாழ்வின் வெற்றிக்கும் மிகவும் பயனளிக்கக் கூடிய வகையில் Rev. Prof. S. பன்னீர் செல்வம் அவர்களால் எழுதப்பட்டவைகளாகும். ஆகவே, வாங்கிப் படித்துப் பயன்பெறுங்கள்!

# வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு

பலரின் கோரிக்கையை ஏற்று, ‘‘சோர்வும் தீர்வும்’’ புத்தகம் 6-வது பதிப்பு அச்சிடப்பட்டு, IBT அலுவலகத்தில் விற்பனைக்கு உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். இதன் தற்போதைய விலை ரூ. 100/-. தேவைப்படுவோர் IBT அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

– ஆசிரியர்

# துதியுங்கள்! ஜெபியுங்கள்!!

1. கோவை, திருச்சி ரோடு அருகிலுள்ள CSI கிறிஸ்துநாதர் ஆலயம் பல ஊழியங்களின் மிஷனெரிகளைத் தாங்கி வருகிறது. கடந்த மே மாதம் 31-ஆம் தேதியன்று இந்த ஆலயத்தில் 40 மிஷனெரிகள் பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள். IBT ஊழியத்தின் இரண்டு மொழிபெயர்ப்பாளர்களும் இதில் அடங்குவார்கள். ஏற்கனவே இச்சபையானது IBT-இன் 3 மிஷனெரிகளைத் தாங்குகிறார்கள். இதற்காகவும் இச்சபை கமிட்டியின் செயலர், பொருளாளராக வருபவர்களும், சபை குருவாக வருபவர்களுக்கும் மிஷனெரி வாஞ்சை இருப்பதற்காகவும் கர்த்தரைத் துதியுங்கள். இச்சபையின் தற்போதைய இலக்கான 200 மிஷனெரிகளைத் தாங்க வேண்டுமென்ற இலக்கை அடையவும், காணிக்கைகளை உற்சாகமாகக் கொடுக்கின்ற இச்சபை மக்களை கர்த்தர் ஆசீர்வதிக்கவும், இச்சபையின் போதகர்கள் பொறுப்பாளர்கள் அனைவரையும் கர்த்தர் மென்மேலும் ஆசீர்வதித்து, சபை வளரவும் ஜெபியுங்கள்.

2. தேவ நாமம் மகிமைப்பட பல திருச்சபைகள் மற்றும் தனிப்பட்ட குடும்பங்கள் IBT ஊழியம் மட்டுமின்றி பல ஊழியங்களின் ஊழியர்களைத் தாங்கி வருவதற்காக கர்த்தரைத் துதியுங்கள்! இப்படிப்பட்ட நல்ல உள்ளங்களின் மூலமாக கர்த்தரை அறியாமல் இருளில் இருக்கும் மக்கள் ஒளியான வாழ்விற்கு மாற்றப்படுகிறார்கள். ஊழியங்களை தாங்கி வருகிற அனைவரையும் கர்த்தர் எல்லாத் தீமைகளுக்கும் விலக்கிக் காத்து நன்மையினால் முடிசூட்ட ஜெபியுங்கள்.

3. இம்மாதம் 18, 19 தேதிகளில் சென்னையிலுள்ள "Jubliee Memorial Bible College Campus" இல் IBT-இன் பிரதிநிதிகள் திட்டக்கூடுகை நடத்த தீர்மானிக்கப்பட்டதற்காக கர்த்தரைத் துதியுங்கள். இந்நாளில் பல ஊர்களில் இருக்கும் IBT பிரதிநிதிகள் உற்சாகத்தோடு கலந்து கொண்டு நல்ல ஆலோசனைகள் கொடுக்கவும், இக்கூடுகை மூலமாக சென்னையில் புதிய பிரதிநிதிகள் கிடைக்கவும், இது ஊழிய வளர்ச்சிக்கு ஏதுவாக அமையவும் ஜெபிப்போம்.

4. பவானி, கரூர் பகுதியில் பணிபுரிய திரு. பெனியேல் ராஜா என்பவர் ஜூன் மாதத்திலிருந்து முன்னேற்றப் பணியாளராகப் பணிபுரிய நியமிக்கப்பட்டதற்காக கர்த்தரைத் துதியுங்கள். இவர் தன் பணியை கர்த்தருக்குப் பயந்து, உற்சாகத்தோடு புதிய தாங்குநர்களைக் கண்டு பிடிக்கவும், இதைப்போல முன்னேற்றப் பணியாளர்கள் இல்லாத 30-க்கும் மேற்பட்ட ஊர்களில் வாலிபர்கள் கிடைக்க ஜெபியுங்கள்.


**SEND ALL YOUR CONTRIBUTIONS**

**Cheques / DD / M.O. to**

**INDIAN BIBLE TRANSLATORS**

Civil Aerodrome Road, Coimbatore - 641 014.

Phone : 0422 - 3527370

WhatsApp & Mobile : 90470 57414

E-mail : indianbibletranslators@gmail.com

**Web : www.ibtword.com**


## சத்திய வார்த்தை

'சத்திய வார்த்தை' பத்திரிகைக்கு உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம். வருட சந்தா ரூபாய். 100/-

*சந்தா அனுப்ப வேண்டிய முகவரி :*

**WORD PUBLISHERS TRUST**

Civil Aerodrome Road, Coimbatore - 641 014.


| | |
|---|---|
| Editor & Published by<br>On behalf of | **Mr. K. JAISINGH**<br>**WORD PUBLISHERS TRUST**<br>14, Ashok Layout,<br>Civil Aerodrome Road,<br>Coimbatore - 641 014. |
| Printed by | **Mr. C.K. VENKATESH**<br>Chandra Prabha Press<br>113-118, V.H. Road, CBE-1. |


## வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு

சத்திய வார்த்தை பத்திரிகையின் சந்தாவைப் புதுப்பிக்காதிருந்தால் ரூ. 100/-ஐ மணியார்டர் மூலமாகவோ அல்லது கீழே குறிப்பிட்டுள்ள வங்கி மூலமாகவும், கீழேயுள்ள **QR Code**-ஐ **SCAN** செய்து, கைப்பேசி மூலமாகவும் உங்கள் காணிக்கைகளை எங்களுக்கு அனுப்பலாம். அனுப்பப்பட்ட விவரத்தை உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்.

**தொடர்பு எண். 90470 57414.**

BANK DETAILS

**CENTRAL BANK OF INDIA**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 1630413107 |
| Name | : | Word Publishers Trust |
| Branch | : | Kalapatti |
| IFS Code | : | CBINO282057 |

**SCAN & PAY**

Address :

**WORD PUBLISHERS TRUST**

14, Ashok Layout,

Civil Aerodrome Road,

Coimbatore - 641 014.


**SATHTHIYA VAARTHAI - TAMIL**

Date of Publishing : 2nd & 3rd July 2026

Postal Regd. No. **CB/052/2024-26**

Licensed to Post without Prepayment No.

**TN/WR/CB/164/WPP/2024-2026 (Tamil)**

**RNI No. 82166**